# முதல் இடைத்தேர்வு - 2024

வகுப்பு : 12 | பொதுத் தமிழ் | பதிவு எண் :

காலம் : 1.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 50

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 8×1=8

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
   (அ) அடிமோனை, அடிஎதுகை (ஆ) சீர்மோனை, சீர்எதுகை
   (இ) சீர்எதுகை, அடிமோனை (ஈ) அடிஎதுகை, சீர்மோனை

2. பொருத்துக.
   (அ) குரங்குகள் – (1) கன்றுகளைத் தவிர்த்தன
   (ஆ) விலங்குகள் – (2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
   (இ) பறவைகள் – (3) குளிரால் நடுங்கின
   (ஈ) பசுக்கள் – (4) மேய்ச்சலை மறந்தன
   (அ) அ–3, ஆ–4, இ–2, ஈ– 1 (ஆ) அ–2, ஆ–4, இ–1, ஈ–3
   (இ) அ–1, ஆ–4, இ–2, ஈ–3 (ஈ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2

3. தமிழில் திணைப்பாகுபாடு ________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   (அ) தொடர்க்குறிப்பு (ஆ) சொற்குறிப்பு
   (இ) பொருட்குறிப்பு (ஈ) எழுத்துக்குறிப்பு

4. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாகத் தி.சு.நடராசன் குறிப்பிடுவது.
   (அ) இலக்கண விளக்கம் (ஆ) சங்க இலக்கியம்
   (இ) தண்டியலங்காரம் (ஈ) தொல்காப்பியம்

5. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   (அ) நீர்நிலைகள் (ஆ) மழைத்துளிகள்
   (இ) மழை மேகங்கள் (ஈ) சூரிய ஒளிக்கதிர்

6. 'முதல்கல்' சிறுகதையின் ஆசிரியர் ________
   (அ) மருதன் (ஆ) அய்யப்ப மாதவன் (இ) உத்தமசோழன் (ஈ) பூமணி

7. வெங்கதிர் – இலக்கணக்குறிப்புத் தருக.
   (அ) வினைத்தொகை (ஆ) உரிச்சொல் தொடர்
   (இ) இடைச்சொல் தொடர் (ஈ) பண்புத்தொகை

8. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ________
   (அ) திருமணமும் குடும்பமும் (ஆ) மன்றங்களும் அவைகளும்
   (இ) அறவோர், துறவோர் (ஈ) நிதியமும் சுங்கமும்

## பகுதி – II – பிரிவு –1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

9. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
10. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
11. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

### பிரிவு –2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

12. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
13. பசுமைக்குடில் வாயுக்கள் எவை?
14. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பிரிவு –3**

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) இணநிரை (ஆ) வானமெல்லாம்

16. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) கலங்கி (ஆ) பொலிந்தான்

17. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
தாமரை இலை நீர்போல

18. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கலை, களை, கழை

19. தமிழாக்கம் தருக. (அ) Archive (ஆ) Train Track

**பகுதி – III – பிரிவு –1**

ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் விடை தருக. 1×4=4

20. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

21. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

**பிரிவு –2**

ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் விடை தருக. 1×4=4

22. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். விளக்குக.

23. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?

**பிரிவு –3**

ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக. 1×4=4

24. (அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக. **(அல்லது)**
(ஆ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

25. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.
(தமிழ்ஒளி, சூடாமணி, கோதை, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)
(அ) தமிழறிஞர்: முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் __________
(ஆ) தாய்மொழி: ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் __________
(இ) சிறுகதை ஆசிரியர்: முதல் பாதி நவீனம் __________
(ஈ) முன்னெழுத்து அரசன் பின்னெழுத்து தமிழ் மாதம் __________

**பகுதி – IV**

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 2×6=12

26. (அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
(ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

27. (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. **(அல்லது)**
(ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

**பகுதி – V**

28. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 1×4=4
"துன்பு உளது ...." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com